

தென்மொழி

உள்ளே...

நல்ல அறிகுறி

அமைச்சர் தமிழ்க்குடிமகன் உரை

தமிழ்க்களக் கால்கோள்... நிகழ்ச்சி படங்கள்

'திரு'

வரிப்புலியே எழுக!

செய்திகள்

மற்றும் பிற...

வெற்றி விளைக்கும் வினைக்களம்!

பாவல ரேறு
தமிழ்க்களம் தென்மொழியாம்
நாவழங்கு செந்தமிழை
நாடுவார் - யாவருக்கும்
ஏற்ற வினைக்களமாய்
என்றும் இலங்குமே
நாற்றிசையும் போற்ற நயந்து!

மக்கள் பணியில்
மனம்வைத்(து) உழைப்பார்க
தக்க நடுவமாய்த்
தான்விளங்கும் - மிக்கபுகழ்
பாவல ரேறு
தமிழ்க்களம் என்றென்றும்
யாவரும் போற்ற இனிது!

இமிழ்கடல்சூழ் வையகம்
எங்கும் புகழே
குமிகின்ற பாவல
ரேறு - தமிழ்க்களம்
நாட்டு நலம்விழைவார்
நாடும் செயற்களமாய்
ஈட்டுமால் வெற்றி இனிது!

- இ

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 29
ஓலை - 3

கி.பி. 2028 மீனம் - 1997 மார்ச்சு

பொறியிலார் புல்லுரைக் கென்செவி யிளைத்தேன்:
பொய்யர்முன் மெய்யுரைத் திழிந்தேன்;
குறியிலார்க் கொருவழி கூறிநாத் தடிந்தேன்:
கொடியர்முன் பணிந்துளம் நொடிந்தேன்:
நெறியிலார் அழிவதை எண்ணிநெஞ் சொடிந்தேன்
நீர்மையர் வறுமைகண் டழுதேன்;
அறிவிலார் மேன்மேல் உயர்வதை அறிந்தேன்!
அழலென உளங்கொதித் தேனே!

உயர்விலார் தொடர்பை உண்டுளங் கசந்தேன்!
உழைப்பவர் துயர்க்குயிர் துடித்தேன்.
மயர்விலார் சிறப்பற மடிவதைக் கண்டேன்!
மாண்பிலார் பிழைக்கநெஞ் செரிந்தேன்.
அயர்வதை இழிநிலை அடைவதை நினைந்தேன்
அன்பிலார் இன்மொழி இகழ்ந்தேன்.
வெயர்விலார் நிழல்படுத் துறங்கநெஞ் சழன்றேன்!
வெறுவெளி துயில்வர்கண் டேனே!

பொருட்பெற வாயிரம் பொய்ப்பரைக் கண்டேன்!
பொருள்மக ளிர்க்குளம் புகைந்தேன்!
இருட்புகு கோயிலின் இழிசெயற் குலைந்தேன்,
ஏதுமி லார்க்குநெஞ் சவிழ்ந்தேன்.
அருட்புகு நெஞ்சரென் றார்ப்பரை வியந்தேன்.
அழுக்கறு வார்க்குடல் பொடிந்தேன்.
மருட்புகு கல்வியர் மயல்சீர்க் குயிர்த்தேன்.
மானமி லார்க்கஞ் சினனே!

பணிவினார் தம்மிடைப் பகைவரைப் பார்த்தேன்!
பசியிலார் ஊண்பெறக் கொதித்தேன்!
பிணியினார்க் கிரங்கிலாப் பித்தர்கண் டடுத்தேன்!
பிணியிலார் மருந்துணச் சினந்தேன்!
துணிவினார் நெஞ்சினுட் டுணுக்குகண் டிழிந்தேன்!
துயரிலார்க் கிடுதல்கண் டகன்றேன்
வணிகனார் கைவாய் வரும்படிக் கயர்ந்தேன்.
வல்லிருள் உலகுகண் டேனே!

பாவலரேறு
(சுவடி : 13 ஓலை : 5, 6)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் மூமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி 29) தி.பி. உ0உஅ மீனம் (மார்ச்சு '97) (ஓலை-3

நல்ல அறிகுறி!

காவிரி நீர் பற்றிய முறையான ஒப்பந்தத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்காமல் இயல்பான நடைமுறையைச் சிக்கலாக்கிக், கடந்த இருபத்து மூன்றாண்டுகளாகப் பேச்சு நடத்த இணங்கியும் பிணங்கியும், தவிர்த்தும் தள்ளிவைத்தும் இழுத்தடித்து, இருபத்தெட்டுமுறை பேச்சு நடத்தியும் முடிவுக்கு வரவொட்டாமல் முரண்டுபிடித்து, நடுவர்மன்றத்தின் நயன்மைக்கும் கட்டுப்படாமல் இடக்குச் செய்து தமிழ்நாட்டு அரசையும் மக்களையும் அலைக்கழித்துவரும் கருநாடக மாநில அரசு, தமிழ்நாட்டிலிருந்து இதுவரை தொடர்ந்து மின்சாரம் பெற்றுவருவது மட்டுமல்லாமல் இப்பொழுது அதனை மிகுதியாகக் கேட்குமளவுக்குத் துணிவுபெற்றிருக்கின்றது!

கருநாடக மாநிலத்தில் பலமொழிக் காரர்களெல்லாம் இருந்தாலும் அங்கிருக்கும் தமிழர்கள்மட்டும் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர். தமிழ் மக்களின் குடியிருப்புகள் முதல் தமிழ்த் திரைப்படம் வெளியிடப்படும் திரையரங்குகள்வரை கலவரம் நிகழ்கின்றது.

அவ்வப்போது சிறிதுகாலம் இடைவெளி விட்டாலும் அடுத்தடுத்து நடைபெறும் கலவரங்களால் தாக்குற்றுப் பல்லாயிரக் கணக்கானவர்கள் ஏதிலிகளாகத் தமிழ்நாட்டுக்கு ஓடிவருவது வாடிக்கையாகத் தொடர்கிறது.

கலவரக் கும்பலுக்கு உடந்தையாக இருப்பது மட்டுமன்றிப் பல இடங்களில் காவல் துறையே ஓரவஞ்சகமாகத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கின்றது.

இதுமட்டுமன்று. உலகப் பொதுமறையென்று அறிஞர் பெருமக்களால் போற்றப்பட்டு உயர்ந்து நிற்கும் திருக்குறளை இயற்றி வழங்கிய திருவள்ளுவப் பெருந்தகை, பெங்களூரில் சிலைவடிவில் முக்காடிட்டு - மூடிவைக்கப்பட்டிருக்கிறார். கருநாடக மாநிலத்தவர் ஒருவர் இந்தியாவின் தலைமையமைச்சராகவே இருந்தாலும், அவர் அரசைத் தமிழ் நாட்டவர்கள் தாங்கிப்பிடிக்கும் நிலை இருந்தாலும் அந்த முக்காடு நீக்கப்படவில்லை - நீக்கமுடியவில்லை.!

மைசூரில் தமிழர்களுக்கிடையே இன்னிசைச் சொற்பொழிவாற்றச் சென்றிருந்த நம் தமிழறிஞர் ஒருவர் (பேச்சு வழக்கில் கன்னடமும் தெலுங்கும் தெரிந்தவர்) தம் உரைக்கிடையில் திருக்குறளை மேற்கோள் காட்டிய அளவில் ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது போல் கொதித்தெழுந்து, 'திருக்குறளைச் சொல்லாதீர்கள், திருக்குறளைச் சொன்னால் கலவரம் மூளும்' என்று கூறியிருக்கிறார்கள். கருநாடகத்தவரிடையே இத்தகைய நிலைதான் நீடிக்கிறது.

இத்தனைக்குமிடையில் கருநாடக அரசு தமிழ்நாட்டிலிருந்து மேலும் மின்சாரம் கோருகிறது என்றால், தமிழர்கள் இளித்த வாயர்கள் என்ற நினைப்பாக இருக்க வேண்டும் அல்லது தலைமையமைச்சர் கருநாடகத்தவர் என்ற அதைப்பாக இருக்கவேண்டும்!

தமிழ்நாட்டரசின் மின்துறை அமைச்சர் ஆர்க்காட்டு வீராச்சாமி அவர்கள் 'கருநாடகத்தில் கடுமையான மின்சாரப் பற்றாக்குறை நிலவினாலும் கருநாடகம், தமிழ்நாட்டுக்கு ஞாயமாகக் கிடைக்கவேண்டிய தண்ணீரைக் கொடுக்காத நிலையில் நாம் அவர்களுக்கு மின்சாரம் கொடுத்தால் மக்களின் சீற்றத்துக்கு ஆளாக நேரிடும் என்பதால் கொடுக்க மறுத்துள்ளோம்' என்று வளைத்துரைத்தாலும் மொத்தத்தில் தமிழ்நாட்டரசு மறுத்திருப்பது முந்தைய நிலையினும் வேறுபட்டது என்பதோடு, அது சரியான பாதையில் அடிவைக்கிறது என்பதற்கான அறிகுறியாகக் கொள்ளலாம்!

காவிரிச் சிக்கலைப் பொறுத்தவரையில், கருநாடகத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒருமுகமாக நிற்பது போல் தமிழ்நாட்டிலுள்ள எந்தக் கட்சியினராயினும் தமிழ்நாட்டு மக்களின் நலனொன்றே கருதி இன்றைய இந்நிலைக்கு மாறுபடாமல் ஒருமுகமாக நிற்பது இன்றியமையாதது.

தமிழ்நாட்டரசு, கருநாடகத்துக்கு இனி மின்சாரம் தர மறுப்பது மட்டுமன்றி, முன்பு கொடுத்துவருவதையும் நிறுத்துவது சிக்கலுக்குத் தீர்வுகாண வழிவகுக்கும்!

- இறை.

பாவலரேறு தமிழ்க்கள கால்கோள் திருக்குறள் மெய்ப்பொருளுரை நூல் வெளியீடு

(நிகழ்ச்சிச் சுருக்கம்)

பாவலரேறு ஐயா அவர்களின் இவ்வாண்டு அறுபத்தைந் தாவது பிறந்த நாளை யொட்டிப் 'பாவலரேறு தமிழ்க்களம்' நிறுவுதற்கான கால்கோள் நிகழ்ச்சியையும், ஐயா அவர்கள் தம் வாழ்நாட் பெருமுயற்சியாக மேற்கொண்ட திருக்குறள் மெய்ப்பொருளுரையின் முதற்பகுதி வெளியீட்டு நிகழ்ச்சியையும் நடத்தவதெனத் திட்டமிடப்பட்டது; அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிகழ்ச்சி நாள் தி.பி. 2028 கும்பம் 27 திங்கள் (10.3.97) என்று குறித்தாலும் அன்றைக்கு முதல் நாளே கும்பம் 26 ஞாயிறு (9.3.97) அன்றே பல வகையிலும் வாய்ப்பானது என்று கருதியமையால் அவ்வாறே ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நூல்வடிவில் மூன்று பகுதிகளாக அமையும் திருக்குறள் மெய்ப்பொருளுரையின் முதற்பகுதியே அறுநூறு பக்க அளவினதாகையாலும் அதனைச் செம்மையாக அச்சிட்டு வெளியிடுவதென்பது அமைந்து செய்ய வேண்டிய அரும்பணி யாகையாலும், இடையிடையே எதிர்பாராதனவும் இன்றியமையாதனவுமான வேறுபல முயற்சிகளை மேற்கொள்ளவும் சிக்கல்களை எதிர்கொள்ளவும் வேண்டியிருந்தமையாலும் நூற்பதிப்புப் பணி சுணங்க நேர்ந்தது.

முழு அளவில் நூல் வடிவம் பெறாதநிலையில் நூல்வெளியீட்டு நிகழ்ச்சித் திட்டத்தைக் கைவிடாமல் அடையாள வெளியீடாக நூலை வெளியிடுவதென்றும் பின்னர்ச் சில நாளில் அதனைச் செம்மையாக வடிவமைத்து வெளிக் கொணரலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டு அதன்படி நூல் அணியம் செய்யப்பட்டது.

திட்டமிட்டபடி 9.3.97 ஞாயிறு காலை 10 மணியளவில் சென்னை மேடவாக்கத்தில் ஐயா அவர்கள் அமைவுற்றுள்ள பாவலரேறு தமிழ்க்கள வளாகத்தில் திரு. துகிலி பா.சம்பந்தம்

அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை' நிறுவனர் அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதன் பின்னர்த் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகனார், ஐயா அவர்களின் திருக்குறள் மெய்ப்பொருளுரை நூலை வெளியிட்டார். நூற்படிகளைத் திரு. நா. அருணாசலம் (தந்தை பெரியார் தமிழிசை மன்றம்), உ.த.மு.க. பொதுச் செயலர் திரு. மா.செ. தமிழ்மணி, புலவர் அரசமாணிக்கனார், திருவாளர்கள் நிலா.வேங்கடவன், பல்லடம் மாணிக்கம், கல்பாக்கம் வ. வேம்பையன், தென்மொழியின் முன்னாள் அமைச்சர் ந. அரணமுறுவல், துரை. தென்னவன் (எண்ணூர்ப் பைந்தமிழ்ப்பாசறை), 'வள்ளுவர் வழி' ஆசிரியர் கல்லை தே. கண்ணன்; ஆகியோர் மாண்புமிகு அமைச்சரிடம் நூலைப் பெற்றுக் கொண்டனர். அமைச்சரின் வெளியீட்டுரைக்குப்பின் நூல் பெற்றோர் அனைவரின் சார்பாகவும் 'வள்ளுவர் வழி' ஆசிரியர் கல்லை. தே. கண்ணன் ஏற்புரையாற்றினார்.

அடுத்துத் திருக்குறள் பதினாறு கவனகர் இரா. கனகசுப்பு ரத்தினம், நடுவர் திருக்குறள் இராமக்கிருட்டிணன் ஆகியோரும், தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பெ. மணியரசன், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் அமைப்புச் செயலர் திரு. வே. ஆனைமுத்து ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ச. இராமதாசு அவர்கள் தமிழ்க்கள வளாகக் கட்டடப் பணிக்குக் கால்கோள் செய்து கல்வெட்டைத் திறந்துவைத்தார். அடிக்கல் நாட்டப்பெற்றபொழுது கூடியிருந்த அன்பர்கள் அனைவரும் "பாவலரேறு புகழ் ஓங்குக!" என்றும் "தமிழ்க்களம் அமைப்போம்! தமிழ்க்களம் வெல்லும்!" என்றவாறும் உணர்வுடன் முழங்கினர். மருத்துவர் இராமதாசு அவர்களின் தலைமையுரைக்குப் பின்னர்த் திரு துரை. மா. பூங்குன்றன் நன்றிகூற நிகழ்ச்சிகள் முடிவுற்றன. நிகழ்ச்சியில் பல்வேறு தமிழ் அமைப்பினரும் சான்றோரும் பகுதிவாழ் பொது மக்களும் கலந்து கொண்டனர். வந்திருந்தவர்களுக்கு அறக்கட்டளை சார்பாகப் பகலுணவும் வழங்கப்பெற்றது.

பாவலரேறு தமிழ்க்களம் கால்கோள்

திருக்குறள் மெய்ப்பொருளுரை நூல் வெளியீட்டு

நிகழ்ச்சி - படங்கள்

1. மருத்துவர் இராமதாசு உரை
2. கால்கோள் நிகழ்ச்சி
3. கால்கோள் கல்வெட்டுத் திறப்பு
4. பாவலரேறு அடக்க மேடை
5. தமிழ்த்தாய் வாழ்த்து -துகிலி பா. சம்பந்தம்
6. தாமரை அம்மையார் வரவேற்புரை
7. அமைச்சர் தமிழ்க்குடிமகன் உரை
8. மருத்துவர் இராமதாசு கால்கோள் விழா நிறைவுரை
9. நடுவர் இராமக்கிருட்டிணன் உரை
10. அடக்கமேடைக்குப் பூங்கொத்து
11. அடக்கமேடைக்கு மாலை
12. பெ. மணியரசன் உரை
13. ‘வள்ளுவர் வழி’ கண்ணன் உரை
14. வே. ஆனைமுத்து உரை
15. நூல் வெளியீடு முதற்படி பெறுபவர் நா. அருணாசலனார்



பாவலரேறு பெருஞ்சித்திரனார்












பாவலரேறு தமிழ்க்கள முயற்சிகளுக்கு என் உறுதுணையும் ஒத்துழைப்பும் உண்டு!

பாவலரேறு தமிழ்க்களக் கால்கோள் - திருக்குறள் மெய்ப்பொருளுரை நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் தமிழ்க்குடிமகன் பேச்சு!

சென்னை, மார்ச்சு - 9:-

"பாவலரேறு தமிழ்க்களக் கால்கோள் செய்யப்படவிருக்கிறது. உங்களுடைய முயற்சிகளுக்கு என்னுடைய உறுதுணையும் ஒத்துழைப்பும் எப்போதும் உண்டு" என்று இன்று சென்னை - மேடவாக்கத்தில் நடைபெற்ற பாவலரேறு தமிழக்களக்கால்கோள் மற்றும் திருக்குறள் மெய்ப்பொருளுரை நூல்வெறியீட்டு விழாவில் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு உரையாற்றிய தமிழ்வளர்ச்சி



பண்பாட்டுத் துறை அமைச்சர் மு. தமிழ்க்குடிமகன் கூறினார்.

அமைச்சர் தமிழ்க்குடிமகன் நிகழ்த்திய உரை வருமாறு.

"நாளை நடத்த வேண்டிய இந்த நிகழ்ச்சியை விழாக் குழுவினர் ஒருநாள் முன்னதாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை அனைவரும். வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பது

மட்டுமல்லாமல் நாளை சட்டமன்றம் இருக்கிற காரணத்தாலும் வெளியூருக்குப் போக வேண்டியிருப்பதாலும் நானேதான் இதை ஒருநாள் முன்னதாக வைக்கச் சொன்னேன். இது ஒரு வகையில் உங்களுக்கும் எனக்கும் வாய்ப்பு.

பாவலரேறு அவர்களைப் பற்றி நான் வந்து உங்களிடத்தில் எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன். ஆனாலும் உங்களில் சில பேருக்கு மறந்திருக்கலாம். நான் திருச்சித் தூய வள்வர் கல்லூரியின் மாணவர் தலைவராக இருந்த காலத்தில் தென்மொழியைக் கடையில் பார்த்துக் கண்டுபிடித்து அதன்பின் தொடர்புகொண்டு தொடந்து ஐம்பதுக்கு மேற்பட்ட இதழ்களை வரவழைத்து மாணவர்களுக்கு விற்றவன் என்ற முறையில் நம்முடைய பாவலரேறு அவர்களே என்னையும் நேரில் பார்க்காமல் தென்மொழியில் ஒருமுறை எழுதியிருந்தார்.

'தமிழ் நாட்டில் பயில்கின்ற கல்லூரி மாணவர்தம்முள் இந்தத் தனித்தமிழ்ப்பணியில் முன்னிருப்பவர் திருச்சி தூயவளவர் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் செயலாளர் திரு.மு. சாத்தையா ஒருவரே' என்று எழுதியிருந்தார். அந்தச் சாத்தையாதான் இன்றைய தமிழ்க்குடிமகன்!

அதற்கு பிறகு 31.10.1960இல் என்னுடைய திருமணத்திற்கு ஐயா தலைமை தாங்கினார்கள். அதில் ஒரு வியப்பென்ன வென்றால் அதற்கு முன்னால் நானும் அவரும் நேருக்குநேர் பார்த்துக் கொண்டதே கிடையாது. திருமணத்தன்றுதான் நானே அவரைப் பார்த்தேன். எனவே நேருக்குநேர் பார்க்காமலேயே இந்தப் பணிகளைத் தொடர்ந்து செய்தேன். அதற்குப் பிறகு நான் பச்சையப்பனுக்கு வந்தகாலத்தில் தென்மொழி நின்று பிறகு தொடங்கிய போது திரு. இலெனின் தங்கப்பா, செம்பியன் அகியவர்களுடன் நானும் துணையாசிரியராக இருந்தது உங்களுக்கு நினைவிருக்கும் எனக் கருதுகிறேன்.

அதற்குப் பிறகு பச்சையப்பனில் இருந்த காலத்தில் அதை வேகமாக வளர்ப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. காலப்போக்கில் அது பெரிய அளவில் வளர்ந்தது... அதுதான் இன்றைக்கு வந்து கொண்டிருக்கிற தென்மொழி இதழ். அதன்பின் 1969இல் பறம்புக்குடியில் நடைபெற்ற உலகத்தமிழ்க்கழக மாநாடு. 'தனித்தமிழுக்கு இவ்வளவு கூட்டமா' என்று பாவாணரே வியந்து போகின்ற அளவிற்கு மிகப்பெரிய அந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. உங்களில் அதில் கலந்துகொண்டவர் களுக்கு மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரமுடியும் என்று கருதுகிறேன்.

இப்படிப் பல்வேறு நிகழச்சிகள். நான் ஓர் ஆண்டு கடலூரிலேயே தங்கிப் பள்ளியில் கணக்காசிரியராகவும் தென்மொழியில்

துணையாசிரியராகவும் இருந்தது உங்களுக்கு நினைவிருக்கும். அந்த நேரத்தில் ஏற்பட்ட இந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் ஐயா அவர்கள் வெளியிட்ட ஓர் அட்டைப் படத்திற்காகவும் அவர் எழுதிச் சிவப்பு மையிலே அச்சிடப்பட்ட ஓர் ஆசிரிய உரைக்காகவும் 'இந்தியப் பாதுகாப்புச் சட்ட'த்தின்-படி எங்கள் மீதெல்லாம் வழக்குத் தொடரப் பட்டது. அதன் பிறகு ஓராண்டு பறம்புக்குடியிலே வேலைபார்த்த காரணத்தினால் ஒவ்வொரு முறையும் பறம்புக்குடியி லிருந்து கடலூர் வழக்குமன்றம் வந்து போய்க்கொண்டிருந்தேன், ஒன்றரையாண்டுக் காலம். அதற்குப் பிறகு ஐயா அவர்கள் தண்டனை பெற்றார்கள். நானும் இலெனின் தங்கப்பாவும் விடுதலை செய்யப்பட் டோம். பாவாணர் பெயரில் இருந்த வழக்கை அவருக்குத் தொடர் பில்லை என்று தொடக்கத்திலேயே நீக்கச் சொல்லிவிட்டோம். அன்றைக்கு எங்களுக்காக வழக்கறிஞர் மதிப்பிற்குரிய இரெ. இளம்வழுதி. அவருடைய புதல்வர்தான் இள. புகழேந்தி. இன்று இவற்றையெல்லாம் நான் நினைவுகூர்வதற்குக் காரணம் இது நீண்ட நெடிய இயக்கம். இந்த இயக்கத்தில் உங்களைப் போன்றவர்கள் தொடர்ந்து இயங்கிப் பல்வேறு பணிகளைச் செய்ய வேண்டும். செய்ய வேண்டிய காலக்கட்டம் இது.

அமைப்புகள் எத்தனையிருந்தாலும் இங்கு வருகை தந்திருக்கிற எல்லாருக்கும் மொழியுணர்ச்சியும் இன உணர்ச்சியும் நீங்காமல் நிறைந் திருக்கின்றன என்பதில் யாருக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது. எனவே அந்த அடிப்படையில் மாணவனாக இருந்து செய்த அதே பயிற்சியை இப்போது மாண்புமிகு அமைச்சராகவும் இருந்து செய்யமுடியும் என்று அந்த வாய்ப்பை இந்த இயக்கம் எனக்குத் தந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

என்னுடைய தனித்தமிழ்ப்பற்றுக் காரணமாகவும் தமிழுணர்வு காரணமாகவுந்தான் முதல்வர் கலைஞர் அவர்கள் எனக்கென்று தனியாகச் சில வாய்ப்புகளை நல்கியிருக்கிறார்கள் என்பது உங்களுக் கெல்லாம் தெரிந்த உண்மைதான். எனவே அதைப்போல நம்முடைய இராமதாசு ஐயா இருக்கிறார்கள். ஆனைமுத்து போன்றவர்கள் மணியரசன், அருணாசலம், தம்பி வீரபாண்டியன் போன்றவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் சேர்ந்து, இந்தக் காலக்கட்டத்தில் எடுக்கிற முயற்சிக்கு முழு ஒத்துழைப்புத் தரவேண்டும். காரணம் உங்களுக்குத் தெரியும். நம்மை எதிர்ப்பதற்கு - கிண்டல் செய்வதற்கு-பகடி செய்வதற்கு ஒரு கூட்டம் இருக்கிறது. இன்று அவர்களின் முனை மழுங்கியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டவிரும்புகிறேன். மழுக்கியிருக்கிறோம்! ஆனாலும்கூட வாய்ப்ப

கிடைக்கிறபோது அவர்கள் கச்சை காட்டுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியாததில்லை. அந்த வாய்ப்பை அவர்களுக்கு நல்கக் கூடாது. நாம் எல்லோரும் ஒன்றாகிவிட்டோம்; கடுமையாக இறங்கிச் செயல்படுகிறோம் என்ற சூழலை உருவாக்கிவிட்டால் அவர்களும்கூடப் பின்னாலே வருவதற்கு உடனே ஒப்புக்கொள்வார்கள். அவர்களுடைய கடந்தகால வரலாறு அதுதான். சில நேரங்களில் அவர்கள் வழிநடத்தத் தொடங்கிவிடுவார்கள். அதுவும் வரலாறுதான்.

எனவே அப்படிப் பட்ட நிலையில் உங்களிடத்தில்தான் நான் அதிகமாக எதிர்பார்க்கிறேன். உங்களுக்குத் தெரியும். அரசு ஆணைகளைப் பிறப்பிப்பது என்பது மிக எளியது. கடந்த காலத்தில் எத்தனையோ ஆணைகள் போடப்பட்டன. இந்த ஆணைகள் அடங்கிய நூலே ஒன்று இருக்கிறது. ஆனால் செயல்மட்டும் நடக்காது. இன்னும் சொல்லப்போனால் தலைமைச் செயலகத்தில் இருபத்தைந்து விழுக்காடுதான் தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிறது. கடந்த நாற்பது ஆண்டுகளாக. இப்பொழுது தமிழ்த்தட்டச்சுப் பொறிகள் மாற்றப்பட்ட பிறகு கடுமையான மாற்றங்களைப் பார்க்கிறோம். அதை உடன்பட்டு ஒப்புக்கொள்கிற இந்திய ஆட்சிப் பணியாளர்களும் இருக்கிறார்கள். நான் சில நேரங்களில் மென்மையாகவும் சில நேரங்களில் வன்மையாகவும் நடந்து கொள்கிற இயல்பு படைத்தவன் என்பதாலே தேவைப்படுகிறபோது விட்டுவிட்டுபோவது கிடையாது.ஆனால் இது இங்கு மட்டுமல்ல இது கன்னியாகுமரி கோடி வரைக்கும் போக வேண்டும். மதுரை மாவட்டம் என்று மட்டும் எடுத்துக்கொண்டால் ஐந்நூற்றுத் தொண்ணூற்றைந்து சார்நிலை அலுவலகங்கள். அதைப் போல் அத்தனை அலுவலகங்களுக்கும் போய்ச்சேர வேண்டும். அத்தனைக் கடுமையான வேலை- ஒரு கோணத்தில்.

அதைப்போல் என்னுடைய துறைக்கு அப்பாற்பட்ட வேலைகளையும் நான் எடுத்துச் செய்கிறேன். தொடர்வண்டித் துறையில் **மலைக்கோட்டை விரைவு வண்டி** என்று எழுதியிருக்கிறது என்றால் அது என் துறையைச் சார்ந்ததில்லை. என்னுடைய வேலையு மன்று அது. என்னைக் கேட்டால் அன்புத் தமிழர்கள் ஏற்றுக் கொண் டதைவிட அக்கினிகோத்திரிதான் உடனே ஏற்றுக்கொண்டார். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் பல தளங்களில் முயன்று பார்க்கிறோம். அதுவே பெரிய வெற்றி என்று கூறிவிடவில் லை; இன்னும் நிறைய வேலை இருக்கிறது.

தமிழிலே படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்ற நிலைமை, மேல்நிலைப் பள்ளிகளில் முழுமையான மாற்றம் என்ற நிலைமை, அதற்குப்பிறகு, தமிழில் படித்துவிட்டு வேலையில்லாமல்

இருக்கிற பல்லாயிரக் கணக்கான பட்டந்தாங்கிகள், முனைவர்பட்டம் பெற்ற பிறகும்கூட. அந்த நிலைமைகளை யெல்லாம் போக்கக் கூடிய தேவை, கல்விக் கூடங்களில் மிகப்பெரிய சீர்திருத்தங்கள்... இவையெல்லாம் வந்து பயன் தருவதற்குக்கூடப் பல ஆண்டுகள் ஆகும். இந்தப் பணி தொய்வின்றித் தொடர்ந்தால்தான் பயன்தரும். மறந்துவிடக் கூடாது.

ஓர் அமைச்சர் மாறி இன்னொருவர் வந்தால் 'இது தேவையில்லை' என்று எழுதுபவர்கள் இருக்கிறார்கள். இந்தத் துறைக்கு அமைச்சராக வந்தவர்களே அப்படி எழுதியிருக்கிறார்கள், அந்தக் காலத்தில். அதையும் மறந்துவிடக்கூடாது. ஓர் அமைச்சர் செய்தவை தொடர்ந்து இருப்பதைப் போல், செயலில் பிறமாநிலங்களில், பிறநாடுகளில் இருப்பதைப் போல் நம் மாநிலத்தில் இல்லை. ஏதோ ஒரு கட்சியின் தனிப்பட்ட கொள்கையைப் போல் அதைப் போர்வை போட்டு மூடிவிடுகிறார்கள்.

எனவே திறனாய்வுகள் பிறர்பக்கத்திலிருந்து வரட்டும். எதிர்ப் பக்கத்திருந்து வரட்டும். நீங்கள் திறனாய்வுகளை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு நேருக்கு நேர் செயலில் இறங்கவேண்டும். அப்படி இறங்கு வதற்கு அணியமாக வேண்டும். அப்போதுதான் இது முழுமையாகச் செயல்பட முடியும்.

விளம்பரப் பலகைகள் எல்லாம் மாறவில்லை என்று சொன்னார்கள். அது எனக்கே தெரியும் 13.8.97 அன்று தொழிலாளர் நல ஆணையரொடு வணிகப் பெருமக்களும் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்த இருக்கிறோம். அதிலே தெளிவுபடுத்திவிடுவோம். பெரும்பாலும் அதில் யாரும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. நாங்கள் அதை ஏற்க மாட்டோம் என்று கூறவில்லை. இசைவு வந்திருக்கிறது. இன்னும் செயலுக்கு வரவில்லை.

எனவே, அப்படிப் பல நிலைகளை ஒவ்வொன்றாகச் செயலுக்கு நகர்த்த வேண்டியிருக்கிறது. நான் ஒரு பேச்சாளராக இருந்து உங்களுக்கு அறிமுகமானவன். கடந்த நாற்பதாண்டுகளில் ஏராளமாகப் பேசியிருக்கிறேன். இந்த ஐந்தாண்டு வாய்ப்பில் பேச்சைச் சுருக்கிக் கொள்ள வேண்டும் அல்லது நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன். என் அறையிலேகூட நான் பின்வருமாறு எழுதி எழுதிவைத்துள்ளேன்:

"எங்கள் முன்னே எண்ணற்ற தமிழப்பணிகள் - இந்நிலையில் உங்களுக்கு இரண்டொரு மணித்துளிகள்!".

ஏனென்றால் நான் பாவாணர் வாழ்வையும் பார்த்தவன். பாவலரேறு வாழ்வையும் பார்த்தவன். இந்தத் திருக்குறள் மெய்ப்பொருளுரையைப் பாவலரேறு அவர்களால் முழுமையாக முடிக்க முடியாமல் போய்விட்டது. அவர்களுடைய வாழ்நாள் குறிக்கோள்களில் அதுவும் ஒன்று. அதேபோல் பாவாணர் அவர்களுடைய, பதின்மூன்று மடலங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் வரவேண்டும் என்று கருதிய அகரமுதலி அவருடைய முயற்சியின்படியே ஆறாண்டுகளில் 'ஆசைமொழி' என்ற சொல் வரைதான் அவருடைய ஆய்வு நிகழ்ந்திருக்கிறது. அதற்குப் பிறகு இப்போது அது பாவாணருடைய கருத்தையொட்டி, அது முழுமைபெற வேண்டிய திட்டம் என்ற முறையில் அது இன்றைக்கும் செயல்படுகிறது. எனவே பாவாணர் அவர்கள் அந்த ஓய்வுபெற்ற காலத்தில் அதை முழுமையாகச் செயல்படுத்தவில்லையோ என்ற வருத்தம் பாவலரேறு போன்றவர்களுக்குக்கூட உண்டு; எனக்கு அதே போல் பாவலரேறு கடுமையாக முயற்சிகள் எடுத்தும் அவருடைய காலத்தில் இதை முடிக்க முடியாமல் போயிற்று. எனவே இவற்றையெல்லாம் படிப்பினையாக எடுத்துக்கொண்டு தமிழுக்குத் தவிர வேறெதற்கும் நேரத்தை ஒதுக்குவதில்லை என்ற எண்ணத்தோடு செயல்படுகிற காரணத்தினால்தான் எல்லா நிகழ்ச்சிகளையும் ஒத்திப்போட்டு விடுகிறோம். ஒரு நண்பர் இல்லத் திருமணத்திற்கு நாள் கேட்டால்கூடக் கொடுப்பதில்லை. நாகையில் ஒரு திருமணத்திற்குச் செல்வதென்றால் எனக்கு முப்பத்தாறு மணி நேரம் தேவை. அரசு அதற்காக ஏழாயிரம் உருவா செலவழிக்கும்.

வரலாற்று நூல்களைக் கூட வெளியிட்டிருக்கிறோம். ஆனால் அதில் நிறையப் பிழையிருக்கிறது. செய்திகளில் கூட பிழையிருக்கிறது. தொல்-பழங்காலம்; அதுதான் முதல் தொகுதி. அதைத் திருத்தி வெளியிட ஒரு குழு கூடியிருக்கிறது. அதற்குப் பிறகு பிற்காலம். அதற்கும் பலர் கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அகரமுதலிகளை எடுத்துக்கொண்டால் ஆட்சிச் சொல் அகராதிகள் 1962 இல் வெளிவந்தவை மறுபதிப்பு செய்யப்படவே இல்லை. துறை சார்ந்த கலைச்சொற்பட்டியல் போல் 84 அகரமுதலிகள் அந்தந்த துறை வல்லுநர்களை வைத்து சரிசெய்ய வேண்டியிருக்கிறது. வெளிநாட்டுத் தமிழர்களுக்கு உதவிசெய்ய வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் சரிசெய்து ஒழுங்குசெய்து நிறையச் செலவிட்டால்தான் இந்தப் பணிகளை முடிக்க முடியும். நானும் உங்களைப்போல் பார்வையாளனாக இருந்து திறனாய்வு செய்தவன்தான்.

இன்றைக்கு நல்ல வாய்ப்பாகக் கலைஞர் அவர்கள் வந்த பிறகு பாவாணர் நூல்களை நாட்டுடைமையாக்கினார். இந்த முறை மறைமலையடிகள் நூல்களை நாட்டுடைமையாக்கியிருக்கிறார். ஆக நாங்கள் பொறுப்பேற்ற பத்து மாதங்களில் தனித்தமிழுக்கு வித்திட்ட தந்தையாராக விளங்குகிற மறைமலையடிகளுக்கும், பாவாணருக்கும் முழுச் சிறப்பு செய்யப்பெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போதுதான் பள்ளிகளில் பாகம் 1 தமிழ் கட்டாயப் பாடமாகவும் பாகம் 2 ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் ஆக்கி அதன்பிறகு பிறமொழிகளைக் கற்பவர்களுக்குச் சில நெறிமுறைகளை வைத்துள்ளோம். கருநாடக மாநில ஆணையெல்லாம் பெற்று அதைப் படித்துக்கொண்டுள்ளோம். அங்கு ஏற்கனவே பல சிக்கல்களுக்காக உயர் அறமன்றத்திற்குப் போய்ச் சில மாற்றங்களெல்லாம் பெற்று அது சரி செய்யப்பெற்றிருக்கிறது. நமக்கு அந்தச் சிக்கல்கள் கிடையாது. ஏற்கனவே ஒரு முன்னெடுத்துக்காட்டு இருக்கிறது. இப் பணிகளை ஏற்றிருப்பதில் மகிழ்ச்சிகொள்கிறேன்.

ஐயா பாவலரேறு அவர்கள் என்னுடைய திருமணத்திற்குத் தலைமை தாங்குகிற போதுதான் 'மகபுகுவஞ்சி'யென்ற அகவியல் நூலை வெளியிட்டார்கள். அதற்குப் பிறகு எங்களுக்குள் இருந்த எண்ணற்ற மடல் தொடர்புகள்! இன்றைக்கும் அதைக் காப்பாற்றி வருகிறேன். எந்த அளவிற்கு நாங்கள் நெருக்கமாக இருந்தோம் என்பது உங்களுக்குத் தெரியும்.

"அன்புள்ள சாத்தையா அன்றுபோல் இன்றைக்கும்
துன்பம் வரும்போதெல்லாம் உங்களை நான் எண்ணுகின்றேன்!"

என்று பாவலரேறு அவர்கள் எனக்கு எழுதிய வரிகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. இன்னும் பாராட்டி எழுதிய வரிகள் - அதே நேரத்தில் சுருக்கம் சுருக்கமாகப் பல செய்திகள். அந்த மடலின் வாயிலாக அதை அடிப்படையாக வைத்து அவருடைய நூறாசிரியத்தில் வந்த பாடல்கள் எல்லாம் நினைவுக்கு வருகின்றன. வாய்ப்பு நேரும்போது அதுபற்றி விரிவாக உரையாடலாம்!

பாவலரேறு தமிழ்க்களக் கால்கோள் செய்யப்படவிருக்கிறது. இது தொடர்பாக நம்முடைய மருத்துவர் இராமதாசு அவர்களும் பேசியிருக்கிறார்கள். உங்களுடைய முயற்சிகளுக்கு என்னுடைய உறுதுணையும் ஒத்துழைப்பும் எப்போதும் உண்டு என்பதைக் கூறி நான் விடைபெறுகிறேன்!".

- இவ்வாறு அமைச்சர் தமிழ்க்குடிமகன் உரையாற்றினார்.

"திரு"

க. குழந்தைவேலன்

இன்று, தமிழ்நாட்டில் இன, மொழி நாட்டு நலனுக்காக உழைத்த, உழைக்கும் தமிழ்ச் சான்றோர்களின் உழைப்பாலும் கல்வி எல்லாருக்கும் பொதுவாக்கப்பட்டமையாலும், கற்று - கேட்டு உணர்ந்து ஏற்பட்ட விழிப்புணர்ச்சியால் தமிழர்கள் ஓரளவுக்குத் தன்னிலை உணரத் தொடங்கியுள்ளனர். இற்றைத் தமிழக அரசும் இழந்த பெருமை மீட்டெடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு சிறு வெளிப்பாடே திருவில்லிபுத்தூர், திருப்பெரும்பூதூர் போன்ற பெயர் திருத்தம். அஃதாவது முன்பு மாற்றப்பட்ட பெயர்களை மீட்டலும் செம்மைப்படுத்துதலும் ஆகும்.

தமிழக அரசு மேற்கொண்ட முயற்சியின் தொடக்கத்தைக் கண்ட வட மொழியாளரும், வடமொழியாளராகத் தங்களைக் கற்பனை செய்துகொண்டவர்களும் தங்கள், ஏமாற்று வேலைகளும், பொய்யும் புனைவும் வெளிப்பட்டுவிடுமோ என அஞ்சி வழமையான கூக்குரல் இடுகின்றனர். இத்தகைய கூக்குரலுக்கு அறிவு தடுமாறி அடங்கிய காலம் மலையேறிவிட்டது. இன்றைய கூக்குரலில், அது வெற்றி பெறாது என்ற அச்சம் இழையோடுகிறது. அதனால் சற்றும் சிந்தியாது உளறத் தொடங்கியுள்ளனர்.

1996 - சூலைத் திங்களில் தமிழகச் சட்டமன்றத்தில் 'ஸ்ரீ' வில்லிபுத்தூரை திருவில்லிபுத்தூர் என மாற்றம் செய்வது குறித்து பேசப்பட்டது. அது கண்டு பொறாத வடமொழியை முன்னிறுத்தி வாழும் அறிவுக்கொழுந்துகள் தம் அறிவுத்திறம் விளங்க மறுப்புத் தெரிவித்து அறம்(!) பாடியுள்ளன. அவர்கள் கூறும் தடைகளைக் காய்தல் உவத்தலின்றித் தமிழ் மக்கள் அறியச் செய்தல் இன்றியமையாதது.

"ஸ்ரீவில்லிபுத்தூர் மிகத் தொன்மையான ஊர். வியாசர் எழுதிய பிரம்மாண்ட புராணத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்குமுன் மொழி பெயர்க்கப்பட்டுள்ள தமிழ் நூலில் வில்லிபுத்தூர் என முன்னர் வழங்கப்பட்ட இவ்வூர் 'ஸ்ரீ அல்லது மகாலக்குமி ஆண்டாளாக இவ்வூரில் பிறந்தமையால் 'ஸ்ரீ வில்லிபுத்தூர்' எனப் பெயர் பெற்றது" என்கின்றனர்.

வில்லிபுத்தூர் பிரமாண்ட புராணத்தில் குறிக்கப்பட்டது உண்மையா என்பது ஒரு புறம் இருக்க, அதன் காலம் எவ்வளவு பழமையானது என்பது ஐயமறத் தெரிவது அன்று. தமிழ்நாட்டுப்

பெயர்கள் வடவர்களால் அறியப்பட்டிருப்பதிலும், வடமொழி நூல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதிலும் வியப்பொன்றுமில்லை. இயல்பே. ஆனால் தமிழ்நாட்டுப் பெயர்கள் அப்படியே முழுதும் தமிழாய் எழுதப்படுவதில்லை. வடமொழிக் கேற்பவே எழுதப்படும். எடுத்துக்காட்டாகத் தமிழ் - தமிழம் - திரமிளம் - திராவிடம் காண்க.

மேலும் நந்திவர்மப் பல்லவனுடைய உதயேந்திரம் செப்பேட்டில் மேற்கு அடையாற்று நாடு என்பதை 'பச்சிமாச்ரய விசயம்' என்றும், பாலாற்றை 'க்ஷீன நதி' என்றும், சிற்றாற்றை 'ஸ்தோக நதி' என்றும் இதுபோன்று தமிழ்ப்பெயர்களையெல்லாம் வடமொழிப்படுத்தி எழுதுவது அவர்களது இயல்பு. எனவே இவர்கள் கட்டிக்கொண்ட பிரமாண்ட புராணத்திலும் அதன் மொழிபெயர்ப்பிலும் ஸ்ரீ என இருந்ததால் இது தொன்மையும் வழமையும் ஆகாது.

ஆண்டாளுடைய காலம் 9-ஆம் நூற்றாண்டு என்பர் அரசமாணிக்கனார். நம்மைவிட வடமொழியையும், வடமொழியாளரையும் போற்றிப் புரந்தவர்கள் தமிழகத்து அரசர்கள் என்பதை முன்னரே கூறியுள்ளோம். அதேபோல் பத்திப் பெருக்கால் ஆழ்வாராதியரையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். ஆண்டாள் திருமகளின் அவர்கள் கூற்றுப்படி ஸ்ரீ அல்லது மகாலக்குமியின் மாந்தவடிவப் பிறப்பு என்பதை அவ்வரசர்களுக்கும், அவ்வரசர்கள்தம் அரசவை அலுவல்களில் இருந்த 'உயர்குடி' அலுவலர்களுக்கும் தெரிந்திருத்தல் வேண்டுமன்றோ? பின்னர் ஏன் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பாண்டியன் சடையவர்மனும் 13-ஆம் நூற்றாண்டில் ஆண்ட திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியனும் 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி செய்த விசுவநாத நாயக்கனும் 'ஸ்ரீ வில்லிப்புத்தூர்' என எழுதாது 'வில்லிபுத்தூர்' என்றே எழுதினர். இதிலிருந்தே இதுபுரட்டு என்பது வெளிப்படும்.

"திரு - ஸ்ரீ என்ற இரண்டும் வெவ்வேறு பொருள் தருவன. திரு - ஸ்ரீ என்பதன் மொழிபெயர்ப்பன்று" என்பர்.

ஸ்ரீ என்பது திருமகள் அஃதாவது மகாலட்சுமி என்பது இவர்கள் கூற்று. கழகக் காலம் முதல் இன்றுவரை 'திரு' என்பது திருமகளையும் குறித்து வந்த சொல்லே என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. நமது இலக்கியங்கள் யாவும் மகாலக்குமியை 'திரு' வென்றும் திருமகள் என்றுமே அழைக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சில :

"திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்ப" - கலி : 44

"மாயவன் மார்பில் திருப்போல்வாள்" - கலி : 145

"திருவின் செய்யோள் போன்றினி திருப்ப" - மணிமேகலை 16:34

"திருவின் செய்யோ ளாடிய பாவை"	- சிலம்பு 6:61
"திருவின் செல்வி"	- மணி - 18:21
"திருவிழை மூதூர் தேவர்கோன்"	சில - 3:34
"தவந்தீர் மருங்கில் திருமகள் போல"	பெருங் - 3:1:176
"திருநிலைஇய பெருமண் ணெயில்"	பட்டினப் : 291
"திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்	சிலம்பு - 11:40

இன்னும் நூற்றுக் கணக்கில் காட்டலாம். 'திருமரு மார்பன்' என்று இவர்கள் திருமாலை அழைத்ததே இல்லையோ. திருமரு - ஸ்ரீ வத்தம் தானே. எனவே திரு - ஸ்ரீயை அதாவது மகாலக்குமியைக் குறிக்கும் என்பதில் ஐயமில்லை.

"கோயில்களில், வெவ்வேறு திரு முற்றங்களில் (சன்னிதி) வெவ்வேறு திரு உருவங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு திருமுற்றத்தின் முன்பும் 'அருள்மிகு ஆண்டாள்' என்பது போலத் தான் எழுதியிருக்கும். கடவுள் தன்மை பொருந்திய என்பது இதன் பொருள். திரு, திருமதி என எழுதுவதில்லை" எனத் தம் அறிவுத் திறத்தை வெளிப்படுத்தி உள்ளனர்.

இதுவரை இலக்கியங்களிலோ, கல்வெட்டுக்களிலோ 'அருள்மிகு' என்று கடவுள் மற்றும் கோயில் பெயருக்கு முன் வந்ததாகச் சான்று கிடைக்கவில்லை. எமது அறிவுக்கு எட்டிய வரை 1975-க்கு முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கடவுள் பெயருக்கு முன்பும், தெய்வப் பெயருக்கு முன்பும் 'ஸ்ரீ என்று போடுவதை மாற்றப் புகுத்திய சொல்லே 'அருள்மிகு' என்ற சொல். எந்தத் திருமுற்றத்து எக்கடவுளாயினும் 'திரு' எனப் போடுவதே கல்வெட்டில் காலங் காலமாகக் காணப்படும் பெருவழக்கு.

"திருவல்லிக்கேணி, திருக்குடந்தை, திருக்கோட்டியூர், போன்ற ஊர்கள் ஆழ்வார்காளால் பண்டே வழங்கப்பட்டன. ஆனால் வில்லிபுத்தூர் ஆண்டாள் பிறப்பதற்கு முன் வில்லிபுத்தூரே. மகாலக்குமியாகிய ஸ்ரீ பிறந்த இடம் என்பதாலேயே இது ஸ்ரீ வில்லிபுத்தூராயிற்று. ஸ்ரீ என்பது ஆண்டாளையே குறிக்கும்'' என்கின்றனர்.

ஆழ்வார்கள் தம் பாடலில் செய்யுள் சந்தத்திற்கேற்பவும், நேர்ச்சிக்கேற்பவும் ஓர் ஊரின் முன் 'திரு' என அடைமொழி சேர்த்தும், சேர்க்காமலும் பாடியுள்ளதைப் பாசுரங்களில் தோய்வார் நன்குணர்வர். எடுத்துக்காட்டாக அனந்தபுரம் (திருவனந்தபுரம்) இடவெந்தை (திரு இடவெந்தை) இந்தளூர் (திருவிந்தளூர்) ஊரகம் (திருவூரகம்) கடிகை

(திருக்கடிகை) கண்டியூர் (திருக்கண்டியூர்), கண்ணமங்கை (திருக்கண்ணமங்கை) சேறை (திருச்சேறை) நின்றவூர் (திருநின்றவூர்) பாடகம் (திருப்பாடகம்) பாற்கடல் (திருப்பாற்கடல் வடநாடு) புல்லாணி (திருப்புல்லாணி) வெஃகா(திரு வெஃகா) போல பல கோயில்களைத் 'திரு' என்னும் சொல் சேர்க்காமலே பாடிச் சென்றுள்ளனர். ஆனால் மக்கள் வழக்கிலும் கல்வெட்டுகளிலும், 'திரு' என்று அடைசேர்த்தே வழங்கப்பட்டுள்ளதே. அதேபோல் குடந்தையைப் பற்றியும் பாற்கடல் பற்றியும் ஒவ்வொன்றையும் ஐம்பத்தொரு பாடல்களில் விளித்துப்பாடிய ஆழ்வார்கள் குடந்தையை மூன்று இடத்திலும். பாற்கடலை ஒரே ஒரு இடத்திலும், மட்டுமே 'திரு' என்ற சொல் சேர்த்து குறிப்பிடுகின்றனர். ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பெற்றனவும் பாடப்பெறாதனவுமான தமிழகத்துக் கோயில்கள் அனைத்தும் அவர்கள் குறிப்பிட்டாலும், குறிப்பிடாவிட்டாலும் 'திரு' என்று மேன்மைப்படுத்தி மதிப்பாக அழைப்பதே தமிழகத்து மரபு. அம் மரபுப்படியே வில்லிபுத்தூரும் திருவில்லிபுத்தூர் என்று அழைக்கப்படுகிறது. அதுதான் முறைமையுமாகும்.

மேலும் ஆண்டாள் பிறந்ததால் 'ஸ்ரீ' என்று குறிக்கப்பட்டது என்றால் ஆழ்வார் பாடல்களும் கல்வெட்டுகளும் திருவரங்கம், திருவரங்கன் என்றும் பலகால் பன்னிப் பன்னிப் பேசுகின்றனவே அவற்றை எல்லாம் விட்டு 'ஸ்ரீரங்கம்' என்றும் 'ஸ்ரீரங்கநாதன்' என்றும் திரித்துவிட்டோமே. இதுபோல் ஆழ்வார்கள் திரு எனச் சேர்த்த இடங்களை எல்லாம் 'ஸ்ரீ' ஆக்கிப் பேசுகின்றீர்களே இது எந்தப் புராணக்கூற்று. இதுதான் வடமொழிக் கீழறுப்போ!

வைணவர்கள் 'திரு' என்ற சொல்லை வெறுப்பதில்லையாம். எங்கே தேவையோ அங்குப் பயன்படுத்திக்கொள்வார்களாம். அப்படியானால் 'திரு' வரங்கத்தில் உள்ள திருவை ஏன் வெறுத்தார்கள். மதுராந்தகத்தில் உள்ள திருவயோத்திப் பெருமாள் ஏன் ஸ்ரீகோதண்டராமர் ஆக்கப்பட்டார். காஞ்சிபுரத்து திரு அருளாளப் பெருமாள் ஏன் ஸ்ரீவரதராஜர் ஆனார். இப்படியே தமிழகத்துக் கோயில்கள் அனைத்திலும் திருவை நீக்கிவிட்டனரே. இவற்றுக்கெல்லாம் 'திரு' மீதுள்ள வெறுப்புக் காரணமன்று. இவை தேவை இல்லாத இடங்கள் எனக் கொள்ளலாமோ?

'ஸ்ரீ வில்லிபுத்தூர்' என்பது 'திருவில்லிபுத்தூர்' என மாற்றப்பட்டால் "அவ்வூரின் வளம்புகழ் எல்லாம் மறைந்துவிடும். பாண்டியன் போக்குவரத்துக் கழகமும் சில மிகை ஆர்வலர்களும் திருவில்லிபுத்தூர் எனக் குறிப்பிடுவதால்தான் திருவில்லிபுத்தூரைச் சுற்றியுள்ள சிவகாசி, இராசபாளையம் முதலியவை தம் வளமிழந்து

காணப்படுகின்றன" என்பது இப்புழுகுணிகளின் திருவாய்ச் சொல்.

இதைக் கேட்க ஆழ்வாராதியர் இன்றிருப்பாரேல் இவர்கள் மீது அறம்பாடி எரித்திருப்பர். இரண்டாயிரம் ஆண்டுகளாக தமது வாழ்வுக்கும், வளத்துக்கும் சில ஓம்படைக் கிளவிகளைக் கட்டிவைத்துக் கொண்டு தமிழரை மருட்டியும் உருட்டியும் வந்ததை ஏற்கனவே கூறியுள்ளோம். அதே உருட்டலை இருபதாம் நூற்றாண்டிலும் 'பிராமணன் சொத்து நஞ்சு' என்பதுபோல ஏய்க்கப்பார்க்கும் ஒரு புதுக்கரடியே இந்த வள அழிவு ஏமாற்றும்.

இவர்கள் கூறுவது மெய்மை என்றால் சோழநாட்டு இறை மற்றும் கோயில் ஊர்ப் பெயர்களில் எல்லாம் திருவை நீக்கி ஸ்ரீ போட்டதால் 'வான் பொய்ப்பினும் தான்பொய்யாக் காவிரி' முன்பைவிடப் பெருக்கெடுத்து வளம் கொழிக்கச் செய்திருக்கவேண்டுமே. ஏன் இல்லை? இந்த நெஞ்சத்து அழுக்கு மூட்டைகளால் காவிரி வரண்டது பாலாறு பாழாறு ஆனது. திரு எனப் போட்டப் பின்னால் சிவகாசி போன்ற சுற்றூர்கள் புதியதொழில் முனைவில் பெயர்பெற்று விளங்குகிறது என்பதை ஏன் மறந்தனர்?

இனியும் தமிழர்கள் மொழியுணர்வும், இன உணர்வும் கொள்ளாது திண்ணைத் தூங்கிகளாக இருந்தால் தமிழினின் இருப்பிடம் வரலாற்றில் இருண்ட இடம் ஆகிவிடும். எழுங்கள் தமிழர்களே எண்ணத்தில் சொல்லில், செயலில் தமிழர்களாக - தமிழ் அரிமாக்களாகச் சிலிர்த்தெழுங்கள்!

எழில். இளங்கோ - கோதைநாயகி வாழ்க!

நெடுநாள் தென்மொழிப் பற்றாளரும் பாவலரேறு ஐயா அவர்கள்பால் பேரன்புடையவருமான விழுப்புரம் திரு. விழுப்பரையன் - எழிற்குமரி இணையரின் மகன் திருநிறைசெல்வன் எழில். இளங்கோவிற்கும், திண்டிவனம் திரு. தா. மணிவண்ணன் - கமலா இணையரின் மகள் திருநிறைசெல்வி கோதைநாயகி என்னும் கயல்விழிக்கும் தி.பி. 2028 கும்பம் 23 அன்று (6/3/97) விழுப்புரம் குரு திருமண மண்டபத்தில் திருவாளர் க. திருப்பாண்டியனார் தலைமையாலும், திருவாளர்கள். அ. நக்கீரன், தமிழநம்பி ஆகியோரின் முன்னிலையிலும், மொழிஅரிமா, சொல்லாய்வறிஞர். ப. அருளியார் அவர்கள் திருமணத்தை நடத்திவைத்தார். தமிழகப் போக்குவரத்துத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, கோவை கு. இராமகிருட்டிணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. மா. சுப்பிரமணியன் நன்றி நவின்றார்.

வீரப்போராளியாக வாழ்ந்துகாட்டியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்!

- முனைவர் கடலூர் மணிமாறன்

('பாரதிதாசன் பெருஞ்சித்திரனார் பாடல்கள் ஓர் ஒப்பாய்வு' - முடிவுரை)

காலத்தின் அறைகூவலை ஏற்றுச் சமகாலப் பட்டறிவோடு ஒருங்கிணைந்த வகையில் தமது படைப்பாற்றலை வெளிப்படுத்தும் பாவலரையே புதுமையியல் பாவலர் எனக் குறிப்பிடுவர். அத்தகைய புதுமைப் பாவலர்களான பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பாநடை இலக்கிய மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள் ஆவர். இருவரும் இளமையிலேயே பாப்புனைந்த ஆற்றல் பெற்றவர்கள். தொல் மரபில் காலூன்றி நின்று புதிய மரபுக்கு வழியமைத்துத் தந்து புத்துலகச் சிந்தனைக்கு உரமூட்டியவர்கள்.

நிகரமைக் குமுகாயத்தை அமைக்க முயலுதல், தொழில் துறைப் போராட்டங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வரவேற்புக் கூறுதல், சாதி வேறுபாடுகளைக் களைதல், சமயத்தை வெறுத்தல், பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தல், புத்தாட்சி அமைய வழிமுறை கூறுதல், பழம் பெருமை பேசி அதனைப் பேணிக் காக்கக் கோருதல், தமிழ்மொழியுணர்வை யூட்டிப் பல்வேறு நிலைகளில் செந்தமிழைச் செழுந்தமிழ் ஆக்குதல் ஆகியன இருவர் பாடல்களிலும் கண்ணில்பட்ட இடமெல்லாம் தட்டுப்படுகின்ற பொதுப்பண்புகள் ஆகும்.

இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த பாரதிதாசனுக்கு நாட்டுப்பற்றைவிட மொழியுணர்ச்சியே உயிர்மூச்சாக இருந்தது. இந்திய விடுதலைக்குப் பின் பாட்டுக் கழனியைப் பண்படுத்திய பெருஞ்சித்திரனார்க்கும் மொழியுணர்வே உயிர்த் துடிப்பாக இருந்தது. “தம் மனை நினையான்; தமிழ் நினைந்திருந்தான்” என்று பாவேந்தரைப் பாடினார் பாவலரேறு. உள்ளபடியே இவ்வரிகள் பாவலரேறு அவர்களுக்கே மிகவும் பொருந்தும்.

“ஆரியரால் விளைவிக்கப் பெற்ற பண்பாட்டுப் புரட்சியினாலும் களப்பிரரால் நேர்ந்த அரசியல் புரட்சியினாலும் தமிழர் வாழ்வு சீர்குலைந்தது. அவர்களுடைய மொழிக்கும் கலைக்கும் பண்பாட்டுக்கும் தீரா இன்னல்களும் இடையூறுகளும் நேர்ந்தன. தமிழை வளர்த்து வந்த கழகமும் தமிழ்க்கலையும் அழிவதற்கு நெருக்கடி ஒன்று தோன்றிற்று.” இதனைக் கருத்திற்கொண்ட பாரதிதாசனும் அவரைத்

தொடர்ந்து வந்த பெருஞ்சித்திரனாரும் தமிழர்களின் வாழ்வில் ஒரு பொற்காலத்தைப் படைக்க வேண்டும் என்னும் ஆர்வமிகுதிகொண்டு தமிழ்மொழி உணர்வைப் பேணிப் பல்வேறு நிலைகளிலும் தமிழை வளமுறச் செய்யும் வழிநிலைகளைக் காட்டித் தமிழரை விழிப்புறச் செய்யும் வேட்கை மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். தமிழ்ப் பகையைச் சாடுவதிலும் தமிழுக்குவரும் கேடுகளைச் சாய்ப்பதிலும் இவர்களின் எழுது கோல்கள் நெம்புகோல்களாக எழுந்து நிற்கின்றன.

பாரதிதாசன், பெருஞ்சித்திரனார் பாடல்களில் தற்சார்புப் பாடல்களும் இசைகெழுமிய தன்னுணர்ச்சிப் பாடல்களும் பெரிதும் இடம் பெற்றிருக்கின்றன. பாரதிதாசனின் பெரும்பாலான பாடல்களில் உணர்ச்சியும் கருத்தும் ஒருங்கிணைந்தே செல்கின்றன. பெருஞ்சித்திரனாரின் பெரும்பாலான பாடல்கள் கருத்துகளுக்கு முதன்மை அளிப்பனவாக உள்ளன.

இறைமறுப்பாளராகத் திகழ்ந்த பாரதிதாசன் தெய்வநிலைத் தன்மைகளை இயற்கையின் மீது புகட்டுவதிலோ, அதனை அளப்பரிய ஆற்றலாகக் காண்பதிலோ அக்கறை காட்டவில்லை. இயற்கையின் மீது மாந்த நேயங்களைக் காட்டி அதிலிருந்து புதிய குமுகாயம் பற்றிய கருத்துகளை வெளிப்படுத்திக் காட்டும். நோக்கு பாரதிதாசன் பாடல்களில் பரந்து கிடக்கின்றது. பெருஞ்சித்திரனாரின் பாடல்களில் இயற்கைப் புனைவு அதிகமாக இடம் பெறவில்லை.

தமிழ் மரபையும் பண்பாட்டையும் நிலைநிறுத்திக் கொள்ளும் முனைப்பு இவ்விருவரின் கதை நெடும்பாடல்களிலும் காணக்கிடக்கின்றது. இடித்துரைகளும் இனிய அறிவுரைகளும் இருவர்தம் கதை நெடும் பாடல்களில் பொதிந்துள்ளன. கதைக் கரு, கதைச் செறிவு, இலக்கிய மாந்தப் படைப்பு, வாழ்வியல் உண்மைகள் ஆகியன பாரதிதாசன் கதை நெடும்பாடல்களில் ஓங்கித் திகழ்கின்றன.

உள்ளத்தை ஈர்க்கும் சொற்களை ஏற்ற இடங்களில் இனிமையாகக் கையாளும் திறம் இருவருக்கும் கைவந்த கலையாக இருக்கிறது. இலக்கண மீறல்கள் இவ்விருவரும் அறியாதவை. விருப்பமான சொற்கள், விழுமிய சொற்கள், புதிய உவமைகள், கவின் கற்பனை இருவர் பாடல்களிலும் இடம்பெற்றுக் கன்னனை நெஞ்சுக்குள் இருத்தச் சொல்லும் பாக்களாய் இலங்குகின்றன. இருவரும் நடையில் தனித்தே நிற்கின்றனர். நடையியல் உத்திகளை நன்கு பயன்படுத்தி யுள்ளனர். பாடல்களில் போராட்ட உணர்வுமிக்குள்ளது. பெருஞ்சித்திரனாரோ தம் பாடல்களைப் போலவே வீரப் போராளியாக வாழ்ந்து காட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"அடிப்படையை மாற்றும் ஆற்றலுடையவனே புரட்சியாளன். அந்த வகையில் குமுகாயக் கேடுகளை வேரறுக்கும் வீரராகப் பாரதிதாசன் விளங்குகின்றார். பூசி மெழுகும் போக்கும் அவருடைய பாடல்களில் இல்லை. எதையும் உண்டு இல்லை என உரைக்கும் உறுதியும் துணிவும் அவரது உடைமைகள்". என்ற கூற்று பெருஞ்சித்திரனார்க்கும் பொருந்தும். காரணம் பாரதிதாசனிடம் இருந்து மொழி உணர்வையும் பாவாணரிடம் இருந்து மொழி அறிவையும் பெற்றவர் பெருஞ்சித்திரனார்.

"எந்த அளவு தனி யொருவர், இந்த குமுகாய இயல்புணர்வானது மொழிவழிச் செயல்பட, தன் தனி மாந்தக் குணத்தை அமைத்துக் கொள்கிறாரோ அல்லது குமுகவயமாகிறாரோ" அந்த அளவுக்கு அவர் படைப்பாளியாவர் என்பதற்கேற்பப் பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும் தமிழ்க் குமுகவயமானவர்; ஆகிப் பாடல்கள் புனைந்ததோடு நின்றுவிடாமல் பார்வையாளர்களாகவும், பங்காளர்களாகவும் பணியாற்றிய பண்பாளர்கள் ஆவர்.

ஆங்கிலப் பாவலர் செல்லியைப் பற்றி எழுதும்போது "அவன் எப்படி வாழ்க்கையில் தனித்து நின்றானோ அதேபோல் ஆங்கிலப் பாவலர் இடையேயும் தனித்தே நிற்கிறான்" என்று குறிப்பிடுவதைப் போலப் பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும் தத்தம் வாழ்க்கையில் எப்படித் தனித்து நின்றார்களோ அப்படித் தமிழ்ப் பாவலர் நடுவிலும் இவ்விருவரும் தனித்தன்மையுடன் நிற்கின்றனர்.

"தமிழினம் ஒன்றுபட்டு உலக மக்களோடு சரிநிகராக வாழவேண்டும் என்பதற்காகத் தமிழர்களிடம் இருக்கும் இல்லாமை கல்லாமை, பொல்லாமைகளைக் களைந்தெறிவதில் இவர் ஒரு புரட்சிப் பாவலர்" என்று பாரதிதாசனைப் பற்றிய மதிப்பீடு பாவலரேறு பெருஞ்சித்திரனார்க்கும் ஏற்புடையதே.

தமிழ் மொழியோடும், தமிழ் மண்ணோடும், மரபோடும் இரண்டறக் கலந்தநிலையில் தமிழியமான பொதுமை உணர்வு பெரஞ்சித்திரனாரிடம் இயல்பாகப் பொதிந்திருந்தது.

"நூறு பாவலர்கள் சேர்ந்த புரட்சிக்கழகம் அவர்! எதிர் காலத்தில் உருவாகவிருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பாவலர்களுக்கு வற்றாத பேருணர்வு வெள்ளமாக அவர் பாடல்கள் நின்று உயிர்ப்பூட்டும்" என்பது பாவேந்தர்ப் பற்றிய பாவலரேறுவின் மதிப்பீடு ஆகும். பாரதிதாசன் பெருஞ்சித்திரனார் பாடல்கள் ஓர் ஒப்பாய்வு என்னும் இவ்வாய்வு இதனை உறுதி செய்கிறது.

(அடுத்த இதழில் முடியும்)

நமக்கு வந்த மடல்கள்

அன்புடையீர், வணக்கங்கள் பல.

'தென்மொழி' (சுவடி : 28, ஓலை : 8) தி.பி. 2027, மடங்கல் இதழில் ஈரோடை நிலவன் (பூபதி)யின் மடல் வெளியிடப்பட்டிருந்தது.

இரு அமைப்புகளால் நடத்தப்பட்டாலும் பல்வேறு அமைப்புகளின் தோழர்கள் மட்டுமல்லாது பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இவ்வாறு பல அமைப்புகள் சேர்ந்து நடத்திய அவ்விழாவைப் பற்றி ஈரோடை பூபதியின் மடல் உண்மைக்கு மாறாக வீண்பழி சுமத்தியதாக இருந்தது. பழி மடல்களை வெளியிட்டால் தென்மொழியின் உண்மையான உள்ளங்கள் துயரப்படவேண்டி வரும். எவரையும் திறனாயலாம். ஆனால், வீண்பழி சுமத்தக்கூடாது.

பூபதி மடலில் "எந்த நிலையில் தெளிவாக உள்ளார்?" எனத் திரு. தமிழ்மாறன் அவர்களை வினவியிருக்கிறார். 'பாவலரேறு அவர்களின் முதலாமாண்டு நினைவு விழாவை நடத்தியே தீரவேண்டும்' என்று எண்ணி விழாவைச் செம்மையாக நடத்தி முடித்த தொண்டர்களையும் பழிசுமத்தித் தம்மையே தாழ்த்திக்கொண்டார்.

பாவலரேறு அவர்கள் ஓரிறைப்பற்றாளராக இருந்தபோதிலும் நான் ஓர் ஐம்பது ஆண்டுகாலப் 'பெரியார் தொண்டன்' என்று தெரிந்திருந்தும் என்னிடம் கரவில்லாமல் பழகியவர். உண்மையான பெரியார் தொண்டர்களிடம் நம்பிக்கை கொண்டிருந்தவர்.

ஆனால், அக்கூட்டத்தில் திரு. தமிழ்மாறன் அவர்கள் 'முன்பு திராவிடம், திராவிடம் எனக் கூறிவந்தவர், பிறகு தமிழகம், தமிழகம் எனக் கூறி மக்களைக் குழப்பினார்', எனப் பெரியாரைக் குறை கூறினார். ஆனால், என்னைப்போன்ற பெரியார் தொண்டர்கள் அப்பொழிவை நிறுத்திப் பேச்சுக்கு மறுப்புக் கூறுவது மேடை நாகரிகமாகாது. அதனால், அவர் பேச்சை முடித்தவுடன் திராவிடம், தமிழகம் என்று பெரியார் பேச்சில் எவ்வாறு மாறியது என்ற வரலாற்று உண்மையை அவரிடம் நான் கூறியவுடன் அவரும் ஒப்புக்கொண்டார். மறுக்கவில்லை.

வளரும் நிலையிலுள்ள பூபதிபோன்ற இளைஞர்கள் பெரியவர்களை, தொண்டுள்ளம் கொண்டவர்களைக் கொச்சைப் படுத்த வேண்டாம் என அவர்க்கு அறிவுறுத்துகிறோம்.

இவ் வறிக்கையைத் தென்மொழியில் வெளியிடக் கோருகிறேன்.

புலவர். தி.மு. அரசமாணிக்கம்,
(உ.த.மு.க துணைப்பொதுச் செயலர். ஈரோடை.)

வரிப்புலியே, எழுக!

- பாவலர். ப. எழில்வாணன்.

கோடிபல அடித்தவர்கள் மாடிபல கட்டிநிதம்
கொழுப்புடனே திரிக்கின்றார் நாட்டில்! - செல்வச்
செழிப்பினிலே சிரிக்கின்றார் வீட்டில்!
வாடியுளம் வறுமையிலே பாடியழும் ஏழைகளின்
வளமழித்து மகிழ்கின்றார் நெஞ்சம்! - தங்கள்
உளத்தினிலே வளர்க்கின்றார் வஞ்சம்!
கொடியவராம் அன்னவரைக் கடுஞ்சிறையில் வைக்காமல்
குற்றமிலாத் தொண்டர்களை வைத்தார்! - தமிழ்ப்
பற்றினரைத் தண்டனையால் நைத்தார்!
அடிமைமிகு தமிழினத்தை விடிவுசெய உழைப்பவரை
அறமழித்துச் சிறையினிலே போட்டார்! - நயன்மை
உறங்குவதோ? எனமறவர் கேட்டார்!
எவர்காதில் விழுந்ததிங்கே? அவரவரின் வேலையிலே
அவர்நலத்தைத் தேடிநின்றார் நாளும்! தலை
கவிழ்ந்திங்குப் பொதுநலமே வீழும்!
உவர்நீரே உயர்வென்னும் தவளையைப்போல் வாழாமல்
உணர்வோடு தொண்டர்களைக் காப்போம்!- தமிழ்
இனவுரிமை வீழாமல் மீட்போம்!
எத்தனைநாள் வாழ்ந்தாலும் சொத்துநலம் மிகுந்தாலும்
இறுதியிலே எதைக்கொண்டு போவாய்? - தமிழ்க்
குருதியிலே ஒருதுளியாய் ஆவாய்!
'புத்த'னைப்போல் தெளிந்தாலும் சித்தனைப்போல் சிறந்தாலும்
பூந்தமிழின் நலந்தான்உன் வாழ்வு! மறந்து
போந்தனையேல் இனத்திற்கே வீழ்வு!
ஒருதொண்டர் வீழ்ந்தாலும் அருந்தமிழ்க்கே அதுவீழ்ச்சி!
சுவர்போல உணராமல் நின்றாய்! - இங்கு
அவர்வாழத் தமிழ்வாழும் நன்றாய்!
இருள்கண்ட கோழையென மருண்டோடல் இனிவேண்டா!
இளங்களிறே! வரிப்புலியே! தமிழா! - உன்
உளம் நினைத்தால் பெரும்புரட்சி எழுமே!

செய்திகள்

மயிலை மாணவர் நற்பணிமன்றத்தில் திருவள்ளுவர் திருநாள்

தி.பி. 2028 சுறவம் 2 அறிவன் (15.2.97) அன்று சென்னை மயிலார்ப்பூர் மாணவர் நற்பணிமன்றத்தின் சார்பில் மன்ற அமைப்பாளர் செல்வி இசைமொழி தலைமையில் திருவள்ளுவர் திருநாள் விழா நடைபெற்றது. செயலாளர் குமார் அனைவரையும் வரவேற்றார். மயிலைத் திருவள்ளுவர் கோயிலின்றும் புறப்பட்ட ஊர்வலத்தை மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருவாட்டி சந்திரிகா அம்மையார் தொடங்கிவைத்தார். மயிலைத் திருவள்ளுவர் சிலைக்குத் திரு. இராசமோகன் மாலை யணிவித்தார். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் திருக்குறள்மணி இறைக்குருவனார், திருவாளர்கள் க. குழந்தைவேலன், வெற்றிச்செழியன் முதலானோர் உரையாற்றினர்.

திருவள்ளுவர் மழலையர்பள்ளி விழா

தி.பி. 2028 சுறவம் 19 காரி (1.2.97) அன்று, சென்னை - திருவான்மியூர்த் திருவள்ளுவர் மழலையர் பள்ளியில் திருவள்ளுவர் திருநாள்விழா திரு. சீ. அறிவுடைநம்பி தலைமையில் நடைபெற்றது. திரு. கன்னியப்பன் வரவேற்றுப் பேசினார். மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருக்குறள்மணி இறைக்குருவனார், பாவலர் இளஞ்சித்திரன், திரு. வெற்றிச்செழியன், செல்வி இரேவதி ஆகியோர் உரையாற்றினர். அனைவர்க்கும் பொங்கல் விருந்து அளிக்கப் பெற்றது.

ஆவடித் 'தமிழ்ப்பேரவை' விழா

தி.பி. 2028 கும்பம் 18 காரி (1.3.97) அன்று மாலை 6 மணிக்குச் சென்னை - ஆவடி அறிஞர் அம்பேத்கர் அரங்கில் தமிழ்ப் பேரவை விழா திரு. க. அரங்கராசன் தலைமையிலும் திரு. சோம. பொன்னுசாமி முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. செ.ப. முத்தமிழ்மணி வரவேற்புரை யாற்றினார். இயக்குநர் எம். நடராசன் வாழ்த்துரை வழங்கினார்.

திருக்குறள்மணி இறைக்குருவனார் 'தனித்தமிழ் இயக்க வளர்ச்சிக்கு மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆற்றிய தொண்டு' பற்றியும் சொல்லாய்வு அறிஞர் அருளியார் 'பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனித்தமிழ்த் தொண்டு' பற்றியும் இலக்கணப் புலவர் த.ச. தமிழனார் 'தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை யடிகளார்'ப் பற்றியும் உரையாற்றினர். மறைமலையடிகளாரின் பேரன் திரு. தாயுமானவன் நன்றி நவின்றார்.

தென்மொழி அச்சகம், சென்னை - 600 005. (தொலைபேசி : 854 7829)